அணைக்காடு தாய்சேய் நல விடுதி

618—(* வினா எண் 8883) திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அணைக்காடு தாய்சேய் நல விடுதி கட்டப்பட்டும் இன்னும் செயல்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) தஞ்சை மாவட்டம், தாமரன்கோட்டை ஆரம்ப சுகாதார நிலையத்தின் எல்லைக்குள், அணைக்காடு மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலமையம் செயல்பட்டு வருகிறது.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ப. ந. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களே தாமரன்கோட்டை ஆரம்ப சுகதார நிலையக் கட்டுப்பாட்டில் அணைக்காடு கிராமத்தில் மகப்பேறு நிலையம் இயங்கிவருவதாகச் சொன்னார்கள். நான் மெத்த வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்வது அந்தக் கட்டடம் கட்டப்பட்டு ஏழு ஆண்டுகள் ஆகின்றன. இன்னும் அந்தக் கட்டடம் திறக்கப் படாமல் பாழடைந்து கிடக்கிறது. அங்கே ஆயா வேலை செய்வதாகச் சொல்கிறார்கள். அவர்களும் சரிவர அங்கே வந்து கவனிப்பதில்லை. ஒரு நர்ஸ் இருப்பதாகச் சொல்கிறார்கள். தாமன்கோட்டையிலிருந்து சுமார் 12 கிலோமீட்டர் தொலைவில் அது இருக்கிறது, ஆகவே அவர்களும் வருவதில்லை. ஆகவே உடனடியாகத் தகுந்த நடவடிக்கை எடுத்து அதைத் திறப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, அந்த பஞ்சாயத்து யூனியனிலிருந்து 29—9—1982 அன்று நல்வாழ்வுத் துறை பெற்றிருக்கிறது. அந்த இடத்திலே இப்போது Multi-purpose Health Worker's Scheme என்ற அடிப்படையில் அங்கே கே. சாரதாம்பாள் என்ற அம்மையார் அங்கே பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். அது மருத்துவ

மனை கிடையாது, மருந்தகமும் கிடையாது. தாய்சேய் நல விடுதி என்ற அடிப்படையில் இருக்கிறது. அங்கே குழந்தைகளைக் கண்காணிப்பதற்கும் தடுப்பு ஊசிகளைப் போடுவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அது சரியாகச் செயல்படவில்லை என்று சொல்கிறார்கள். உடனடியாகக் கவனிப்பதற்கு தகுந்த ஏற்பாடு செய்யப்படும்.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் விளக்கத்திற்கு நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்தைப் பொறுத்த வரையில் இப்படிப்பட்ட நிலையங்களிலே தாய்சேய் நல விடுதி, மகப்பேறு நிலையம் ஆகியவை ஊராட்சி ஒன்றியக் கட்டுப்பாட்டில் இருக்கின்றன. ஆனால் அங்கே இருக்கிற செவிலியர்கள் மருத்துவத் துறையின் கீழ் இருக்கிறார்கள் என்பது குழப்பமான சூழ்நிலையையும் குளறுபடிகளையும் உண்டாக்குகிறது. எனவே அதைப் போக்குகிற முறையிலே அந்த நிலையங்களை அரசே தன்னகத்தே கொண்டு சிறப்பாக அவை நடைபெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, அண்மையிலே உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்ட சட்டத்தின்கீழ் இந்தப் பிரச்சினை தீர்க்கப்படும்.

திரு. எஸ். பி. மணவாளன் : தலைவர் அவர்களே, இந்த அணைக்காடு தாய்சேய் நல விடுதி மட்டுமல்லாமல் தமிழகத்திலே சுகாதாரத் துறையிலே கட்டப்பட்டுள்ள பல விடுதிகள் இன்னும் ஒன்றியத்திற்கு ஒப்படைக்கப்படாமல் இருக்கின்றன. அங்கே சரியாக தண்ணீர் வசதி செய்யப்படாத காரணத்தினால் அவைகளைப் பயன்படுத்த முடியவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா-? இந்த நிலையைப் போக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, இந்த மூலக்கேள்வி ஒரு தனிப்பட்ட தாய்சேய் நல விடுதியைப் பற்றியது. தனிக் கேள்வி போட்டால் அதுகுறித்த விவரங்களைச் சேகரித்துத் தரலாம். திடீரென்று ஒரு கேள்வியைக் கேட்டால் எப்படிப் பதில் சொல்லமுடியும்?

1986 மே 3]

திரு. மு. ஆனந்தன் : தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே தியாகதுர்க்கம் வட்டத்தில் ஈயனூர் என்ற கிராமத்தில் ஒரு கட்டடம் கட்டப்பட்டது. அங்கே பல்நோக்குப் பெண் மருத்துவப் பணியாளர் 6 ஆண்டுக்காலமாகப்போடாமல் இருக்கிறது. 1982 ஆம் ஆண்டிலே முன்னாள் அமைச்சர் திரு. ராகவானந்தம் அவர்கள் வருகை தந்து அதைத் திறந்தார்கள். அங்கே அதிலிருந்து மருத்துவப் பணியாளர் நியமிக்கப்படவில்லை. எப்போது நியமிப்பார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, முழுவிவரங்களையும் கொடுப்பார்களானால் உடனடியாகக் கவனிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கைத்தறி நெசவாளர்களுக்கு ஆயுள் காப்பீட்டுத் திட்டம்.

619—(*வினா எண் 7485) **திரு. பரிதி இளம்வழுதி :** மாண்புமிகு ஆயத்தீர்வை, கைத்தறி மற்றும் நெசவாலைத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில், கைத்தறி நெசவாளர்களுக்கு இன்ஸ்யூரன்ஸ் அளிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

(முற்பகல் 9-40)

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு தலைவரவர்களே, தமிழகத்தில் கைத்தறி நெசவாளர்களுக்கு இன்ஷ்யூரன்ஸ் அளிக்கும் திட்டம் ஏற்கனவே அமலில் உள்ளது. மூன்று வகையான திட்டங்கள் இருக்கின்றன. கூட்டுறவுத் துறையிலுள்ள நெசவாளர்களுக்கு மட்டும் பொருந்தும்படியான திட்டம். நெசவாளர்கள் தாங்கள் பெறும் சம்பளத்தில் ரூபாய்க்கு ஆறு பைசா கட்ட வேண்டும். கடைசியில், அவர் இறந்த பிற்பாடு 3,000 ரூபாய் ஆயுள் காப்பீட்டுக் கழகமும், 1—7—1984 முதல் கோவாப்டெக்ஸ் 2,000 ரூபாயும் சேர்த்து 5,000 ரூபாய் கொடுத்து வருகிறது. இன்னொரு திட்டம், விபத்து பாதுகாப்பு திட்டம். இதற்கு நெசவாளர் பணம் எதுவும் கட்ட வேண்டியதில்லை. ஆனால், தனியார் துறைக்கு மாத்திரம் பொருந்தும். வேலை செய்கிற பொழுதே இறந்துவிட்டால் அவர்களுக்கு 10,000 ரூபாய்